2023 ஏப்ரல் 6]

வழங்கும் பணிகளையும் அவரே பெரும்பாலான இடங்களில் செய்து கொண்டிருக்கிறார். அவரோடு நாங்கள் தினமும் பேசிக் கொண்டிருக்கிறோம். எனவே, விரைந்து முடிப்பதற்குரிய நடவடிக்கையை நிச்சயமாக எடுப்போம். Road போடுவது மாதிரி, கட்டடம் கட்டுவது மாதிரி, வெள்ளை அடிப்பது மாதிரி, இப்பணிகள் இல்லை. தரையைத் தோண்டி கொண்டு சென்று மேடு, பள்ளங்கள் பார்க்க வேண்டியிருப்பதால், கொஞ்சம் தாமதமாகிறது. எனவே, விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

113—

வணிக வளாகம்

***44980—முனைவர் T.R.B. ராஜா:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி நகரத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வணிக வளாகம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மன்னார்குடியில் வணிக வளாகம் கட்டுவதற்கென்று வீட்டு வசதி வாரியத்திலே தனியாக இடமில்லை. எனவே, அந்தத் திட்டத்தை தற்போது நிறைவேற்றுவதென்பது சிரமம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள்.

முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட நாயகன், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில்தான் மன்னார்குடி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான புதிய பேருந்து நிலையத்தை அங்கே

கட்டுவதற்கான பணி மின்னல் வேகத்தில் நடந்து கொண்டு வருகிறது. அடுத்து, நகராட்சிக்குச் சொந்தமான வேறொரு இடம், பேருந்து நிலையத்திற்கு அருகாமையிலேயே உள்ளது. அங்கே, புதிய வணிக வளாகம் கட்டப்பட்டால், நிச்சயமாக நகராட்சிக்கும், நகர்ப்புர வளர்ச்சித் துறைக்கும் நல்ல வருமானம் கிட்டும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே ஒரு புதிய வணிக வளாகத்தைக் கட்டித்தர முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நகராட்சி நிருவாகம், வீட்டு வசதி வாரியத்தோடு இணைந்து அந்தப் பணியைச் செய்வதற்கு விருப்பப்பட்டால், நிச்சயமாக வீட்டு வசதி வாரியத்தினுடைய சார்பாக நாம் செய்து கொடுக்கலாம். அது நகராட்சியினுடைய முடிவைப் பொறுத்தது. கண்டிப்பாக வீட்டு வசதி வாரியம் செய்ய முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள்.

முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களும், நிச்சயமாக இதற்கு ஒத்துழைப்பார்கள் என்ற முழு நம்பிக்கை எங்களுக்கும் உண்டு. 35 வருடங்களுக்கு முன்னர், பெருமைவாய்ந்த எங்கள் மன்னார்குடி நகராட்சியின் மையப் பகுதியில் கட்டப்பட்ட 132 பழைய வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் மிகவும் மோசமாக, இடிந்து விழும் நிலையிலுள்ளன. எனவே, புதிய குடியிருப்புகள் அங்கே அமைவது மிகவும் அவசியமானது. துறை அங்கே ஆய்வு செய்துள்ளது. பழமைவாய்ந்த அந்தக் குடியிருப்புகளை அகற்ற வேண்டுமென்று அவர்களும் recommend செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். எனவே, விரைந்து நிதி ஒதுக்கி, குடிசையில்லா மன்னார்குடியை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவிடுவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2023 ஏப்ரல் 6]

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு 5 ஏக்கர் பரப்பளவிலே, 132 வீடுகள், 70 ஆயிரம் sq.ft.–ல் இருக்கின்றன. அந்த 132 வீடுகளும் மிக மோசமான நிலையில் இருக்கின்ற காரணத்தினால், அவற்றை இடிப்பதற்கான உத்தரவுகள் கொடுக்கப்பட்டு, அந்தப் பணிகள் தொடங்கப்படவிருக்கின்றன. அவற்றை இடித்த பின்னால், அங்கே புதிய வளாகம், அது வீடாகவோ அல்லது வணிக வளாகமாகவோ கட்டுவதற்கான நடவடிக்கையை நாம் மேற்கொள்ளலாம். இப்பொழுது நான் சொன்னதைப்போல ஏறத்தாழ 70 ஆயிரம் சதுர அடிதான் இருக்கிறது. புதிதாகக் கட்டுகிறபொழுது, இன்றைக்கு இருக்கின்ற விதிமுறைப்படி 5 இலட்சம் சதுர அடியில்தான் நாம் வீடுகளை கட்ட முடியும். எனவே, வீட்டு வசதி வாரியத்திற்கும், அங்கிருக்கின்ற பொதுமக்களுக்கும் அது மிகப் பெரிய அளவிலே பயன்படும் என்று கருதுகிறேன். எனவே, அதைப் பெரிய திட்டமாக, சிறப்பாக நம்மால் கொண்டு வரமுடியும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.*

டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகர்ப் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட சத்தியமூர்த்தி* Housing unit *அடுக்குமாடி வீடுகள் கஜா புயலால் முழுமையாகச் சேதமடைந்து, மிகவும் மோசமாக உள்ளன. அதில் குடியிருந்த அரசு ஊழியர்கள் வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டனர். தற்பொழுது அந்தக் கட்டடங்கள் அனைத்தும் பராமரிப்பின்றி, இடிந்துவிழும் சூழ்நிலையில் உள்ளன. இந்தக் குடியிருப்புகளுக்கு மேற்குப்புறம் அரசு இராணியார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியும், தென்புறம் அரசு அலுவலகங்களும், கிழக்குப்புறம் புதிய பேருந்து நிலையமும் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, முற்றிலும் சேதமடைந்துள்ள இந்தப் பழைய குடியிருப்புக் கட்டடங்களை அகற்றிவிட்டு, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் புதிதாக கட்டடங்கள் அமைத்து, அரசு ஊழியர்கள் குடியிருக்கும் பகுதியாக மாற்றித் தரவும், அதேபோல பூங்கா நகர் பகுதியில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான*

இடத்தில் குடியிருப்புகள் கட்டித்தரவும், மாண்புமிகு அமைச்சர் அவர்களை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 130 இடங்களிலே இது போன்று வாடகைக் குடியிருப்புகள் இருக்கின்றன. அதிலே 61 இடங்களில் மிக மோசமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கேயிருப்பவர்களை உடனடியாகக் காலி செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டு, 61 இடங்களில் உள்ள கட்டடங்களை இடிப்பதற்கான உத்தரவினை அரசாங்கம் கொடுத்திருக்கிறது. அந்தக் கட்டடங்களை இடித்த பின்பு புதிய திட்டங்கள் அங்கே கொண்டுவரப்படும். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, இப்போது இருப்பதைப்போன்ற பல மடங்கு கட்டடங்களை அங்கே கட்டுவதற்கான வாய்ப்பு தற்பொழுதுள்ள விதிப்படி இருக்கின்ற காரணத்தினால், மிகச் சிறப்பாகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற இந்தப் பணியை நம்மால் செய்ய முடியும். கண்டிப்பாக அரசாங்கம் அதை விரைவாகச் செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். கோவை 20–வது வட்டத்தில், அறிவிக்கப்பட்ட வீட்டு வசதி வாரியத்தில் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களால் மிக அதிகமான இடங்கள் வணிக வளாகத்திற்கு ஒதுக்கப்பட்டன. ஆனால், அவை இதுவரை எந்தப் பயன்பாட்டிற்கும் வரவில்லை. ஒரு வாரத்திற்கு முன்பு அந்த இடத்தை விற்பதற்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக முயற்சி செய்கிறார்கள். பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்ட வீட்டு வசதி வாரிய இடத்தில் தயவுசெய்து, மீண்டும் வணிக வளாகம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு*

2023 ஏப்ரல் 6]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தையும் நேரடியாக விற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. அப்படி ஏதேனும் நடவடிக்கை எடுத்திருந்தால், கண்டிப்பாக அதை ஆய்வு செய்து, நாமே கட்ட முடியும் என்றால் வீட்டு வசதி வாரியமே கட்டும். எது வீட்டு வசதி வாரியத்திற்கு இலாபகரமாக இருக்குமோ அந்தவகையிலே அந்தப் பணியை நாம் துவங்கலாம். கண்டிப்பாக, அதை ஆய்வு செய்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

114—

மின்மாற்றி

***22822—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 74–வது வார்டு, சேமாத்தம்மன் நியூ காலனி மூன்றாவது தெருவில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,